# தமிழீழ விடுதலைப் புலிகள்
# Liberation Tigers of Tamil Eelam

21.02.1985

செய்தி ஆசிரியர்,

சிங்கள இராணுவ முகாம்மீது விடுதலைப் புலிகள் தாக்குதல்.

சென்னை.

134 சிங்கள இராணுவத்தினர் பலி.
16 இளம் புலிகள் வீர மரணம்.

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள கொக்கிளாய் ராணுவ முகாம் மீது விடுதலைப் புலி வீரர்கள் நடத்திய உக்கிரமான,வெற்றிகரமான தாக்குதலில் ாற்றுக்கும் அதிகமான சிங்கள இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.தமிழீழ மண்ணில் நிலைகொண்டிருக்கும் ங்கள இராணுவ முகாம் ஒன்றின் மீது முதன் முதலாக மேற்கொள்ளப்பட்ட பெரிய கெரில்லா தாக்குதல் துவாகும்.

இத்தாக்குதல் இம் மாதம் 13ந் திகதி அதிகாலை நடைபெற்றது.நவீனமான,கனரக ஆயுதங் ளுடன் எமது கெரில்லா அதிரடிப்படை அணியொன்று இந்த இராணுவ முகாமை சூழ்ந்து கொண்டு தாக்கு லை ஆரம்பித்தது.இதனையடுத்து இரு தரப்பிலும் கடும் சண்டை மூண்டது.சுமார் 5 மணி நேரம் வரை டைபெற்ற இந்தச் சண்டையில் இராணுவத்தினரின் பாதுகாப்பு அரண்களை உடைத்துக்கொண்டு எமது வீர கள் முகாமிற்குள் புகுந்து நேருக்கு நேர் எதிரியுடன் சமரிட்டனர்.இராணுவத்தினர் தரப்பில் பலத்த யிர்ச் சேதம் ஏற்பட்டது.விடுதலைப் புலி வீரர்களின் மூர்க்கமான,வீராவேசமான தாக்குதலுக்கு ஈடுகொ க்க முடியாது இறுதியில் இராணுவத்தினர் சிதறி ஓடினர்.

இந்தத் தாக்குதலில் மொத்தம் 106 சிங்கள இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.25 பேர் லர படுகாயமுற்றனர்.எமது தரப்பில் 16 இளம் புலிகள் களத்தில் நின்று கடைசிவரை போராடி வீர ரணம் எய்தினர்.9 வீரர்கள் காயமுற்றனர்.

இது இவ்வாறிருக்க முல்லைத்தீவு இராணுவ முகாமிலிருந்து உதவிக்கு அழைக்கப்பட்ட இராணுவ டை மீதும் எமது கெரில்லா அணியொன்று தாக்குதலை நடாத்தியது.நாயாறு என்னுமிடத்தில் கண்ணிவெடி வத்து நடாத்திய தாக்குதலில் 28 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.பலர் படுகாயமடைந்தனர்.இரா வ வாகனங்களும் சேதமடைந்தன.

விடுதலைப் புலி வீரர்களின் இந்த வெற்றிகரமான தாக்குதல்களை அடுத்து முல்லைத்தீவில் காக்கிளாய்,திரியாய் என்னுமிடங்களிலுள்ள இராணுவ முகாம்கள் மூடப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது ழிக் கிராமங்களிலிருந்து இடம்பெயர்ந்த சிங்கள இராணுவத்தினர் இப்பொழுது பதவியா என்னும் சிங்களப் ரதேசத்தில் நிலைகொண்டுள்ளனர்.

# தமிழீழ விடுதலைப் புலிகள்
# Liberation Tigers of Tamil Eelam

தமிழீழ மண்ணிலிருந்து சிங்கள ஆயுதப் படைகளை விரட்டியடிக்கும் எமது போராட்ட இலட்சியத்திற்காக, முதன் முதலாக இராணுவ முகாம் ஒன்றை தாக்கி உயிர்த் தியாகம் செய்த இளம் போராளிகளுக்கு விடுதலைப் புலிகள் இயக்கம் வீர வணக்கம் செலுத்திக்கொள்கிறது.

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்.

இங்ஙனம்,

(எஸ். சுப்பிரமணியன்)
அரசியற் பிரிவு,
தமிழீழ விடுதலைப் புலிகள்.